# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (நீக்கம்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.50** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2011 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (நீக்கம்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 6/2011

## 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு சட்டத்தை நீக்கம் செய்வதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (நீக்கம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (1) 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (நீக்கம்) சட்டம் இத்தால் 2011 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றது. நீக்கமும் பேணல்களும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய நீக்கம் எவ்வாறிருப்பினும் (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(3) 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு சட்டம் 2011 சனவரி 1ஆம் தேதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும் 2011 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையிலிருக்கும் ஓராண்டு காலப்பகுதி முடிவுறும் தினத்திற்கு நேர்முந்திய தினம் வரை அவ்வாறு நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் (2) ஆம் பிரிவின்கீழ் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடாக வருமதியாகவிருக்கும் எல்லாப் பணத்தொகைகளையும் அறவீடு செய்வதற்கும்

2-PL 005589 -1140 (2011/03)

அத்துடன் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடாக அவ்வாறு அவரால் மீட்டுப் பெறப்பட்ட எல்லாப் பணத் தொகைகளையும் நீக்கம் செய்யப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி திரட்டு நிதியத்திற்கு அனுப்புவதற்கும் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றார்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்